2023 ஏப்ரல் 21]

(அஓ) கன்னியாகுமரி மாவட்டம், கால்வாய்களைத் தூர்வாரி பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்வரவுகளை அதிகமாகக் கொடுக்கக்கூடிய பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு 1, 2 மற்றும் முக்கூடல் அணைகளில் தாராளமாகத் தண்ணீர் இருக்கிறது. ஆனால், தக்கலை ஒன்றியம், குறுந்தங்கோடு ஒன்றியம், கிள்ளியூர் ஒன்றியம், முஞ்சிறை ஒன்றியம் போன்ற பகுதிகளில் கால்வாய்கள் சரியாக சீர் செய்யப்படாத காரணத்தினால், கடைநிலை வரை தண்ணீர் செல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடி தண்ணீருக்குக்கூட வாய்ப்பில்லாமல், அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக அந்தக் கால்வாய்களைச் சீர் செய்து, தூர்வாரி, செப்பனிட்டு, மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கும், விவசாய மக்கள் தங்களுடைய பயிர்களைப் பேணுவதற்கும் வசதியாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மேயர் அவர்கள், நாகர்கோவிலில் குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது; பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். உடனடியாகத் தண்ணீரை திறந்து விடும்படி நான் உத்தரவிட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதோடு ராதாபுரம் தாலுகாவிற்கும் சேர்த்து தந்துவிடுங்கள்.*